IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

S.T.C.NO.3/2023

DEPOSITION OF WITNESS P.W. 2

| | | |
|---|---|---|
| NAME | : | G.S.SARAVANAKUMAR |
| FATHER'S NAME | : | SRINIVASAN |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | BRANCH MANAGER, SBI, KATPADI |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 06th day of August 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாரத ஸ்டேட் வங்கி காட்பாடி கிளையில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி அழைப்பாணை பெறப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த ஆண்டு மே மாதம் 27ம் தேதியிலிருந்து நான் மேற்படி கிளையின் மேலாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரான நந்தகுமார் எங்கள் கிளையில் சேமிப்பு வங்கி கணக்கு வைத்துள்ளார். அந்த கணக்கு எண். 20201633561 ஆகும். புகார்தாரர் 10.10.2022 தேதியிட்ட காசோலை எண்.693713 தனலட்சுமி வங்கி, லத்தேரி கிளையை சேர்ந்த மேற்படி எதிரி கொடுத்த காசோலையை அன்றையதினமே எங்கள் வங்கியில் பணமாக்க செலுத்தினார். மேற்படி காசோலையானது காசோலையை வரைந்த நபரின் கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 12.10.2022 அன்று எங்கள் வங்கி கிளையால் திருப்பப்பட்டது. மேற்படி தினத்தில் காசோலை திருப்பப்பட்டதை காண்பிக்கும் பொருட்டு புகார்தாரர் வங்கி கணக்கின் statement ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.